# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2010 - 2011

## தமிழ்மொழி - ஆண்டு 12

சுட்டெண்:.................................................... நேரம்: 180 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. நன்மைக்கு விதையாவது

   அ) கூடாவெழுக்கம் ஆ) கூடாக்கூட்டம் இ) நல்லொழுக்கம் ஈ) நல்நட்பு

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. மயிர் நீப்பின் உயிர்வாழா விலங்கு

   அ) வரிப்புலி ஆ) கவிரிமா இ) ஆண்சிங்கம் ஈ) காராம்பசு

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. எழுவரை வென்ற இளவலின் பெயர்

   அ) பெருஞ்சேரலாதன் ஆ) நெடுஞ்செழியன்
   இ) பாண்டியமன்னன் ஈ) பெருவளத்தான்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. ஆரிய ஊடுருவல் எக்காலப்பகுதியிலிருந்து தொடங்கியது

   அ) முதற்கழகக்காலம் ஆ) இடைக்கழகக்காலமுடிவில்

   இ) இடைக்கழகக்காலம் ஈ) கடைக்கழகக்காலம்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. தமிழினத்தின் வீரவரலாறு கூறும் நூல்

   அ) கலித்தொகை (ஆ) புறநானூறு (இ) ஐந்தொகை (ஈ) நற்றிணை

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. போர்க்களத்தில் புறமுதுகில் புண்பட்டு உயிர்நீத்தல்

அ) வீரமிழத்தல் ஆ) வடக்கிருத்தல் இ) வாகைசூடல் ஈ) கவலையடைதல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. ஐந்தடக்கல் என்பது

அ) ஐந்து அடக்கல் ஆ) ஐம்புலன்களை அடக்கல்
இ) ஐம்பூதங்களை அடக்கல் ஈ) ஐவரை அடக்கல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. உலக ஆதிமொழிக்குடும்பத்தின் மூத்தமொழி தமிழ் என நிறுவியவர்

அ) ஜோன் பேர்சிவல் ஆ) கால்டுவெல் இ) யோன்சிமித் ஈ) ஜோன்பார்சிவல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. ஆண்களின் காற்சிலம்பு இப்படிக் கூறப்படுகிறது

அ) கிண்கிணி ஆ) கழல் இ) கண்ணி ஈ) ஒண்கழல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. சிந்துவெளி நாகரிகத்தையும் தமிழர் நல்வாழ்வையும் வன்கவர்வு செய்தவர்

அ) சீனர் ஆ) ஆரியர் இ) ஐரோப்பியர் ஈ) ஆபிரிக்கர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. யாழ்ப்பாணம் கந்தரோடை தலைநகரமாக விளங்கிய காலம்

அ) கி.மு.300 ஆண்டுகளில் ஆ) கி.பி.500 ஆண்டுகளில்

இ) கி.பி. 800 ஆண்டுகளில் ஈ) கி.மு.200 ஆண்டுகளில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. ஆரிய இராமனைக் கடவுளாக்கி வழிபடுபவர்

அ) சிங்களவர் ஆ) தென்னகத்தார் இ) களப்பரர் ஈ) ஆரியர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. கணவன் இறந்தால் இளம்பெண்கள் உடன்கட்டை ஏற வேண்டும் என்ற பழக்கத்தை நீக்கியவர்

அ) இராசாராம் மோகன்ராய் ஆ) ஈ.வே.ரா. பெரியார்
இ) அறிஞர் அண்ணா ஈ) கலைஞர் கருணநிதி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. ஆதிகாலந் தொடக்கம் தமிழர் வாழ்ந்த நிலம் சிங்கள நகரங்களாக மாற்றப்பட்டன அவற்றுள் இரண்டு

அ) புத்தளம், சிலாபம் ஆ) கண்டி, மாத்தளை இ) கொழும்பு, காலி ஈ) காலி, கண்டி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. ஒழுக்கம் விழுப்பம் தரலால் என்ற தொடரில் விழுப்பம் என்பதன் பொருள்?

அ) நேர்மை ஆ) மேன்மை இ) கீழ்மை ஈ) ஆண்மை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. ஒருவன் கல்வியாலோ, செல்வத்தாலோ செருக்கி இறுமாப்புக் கொண்டலைவானாகில், அவனிடம் தோன்றாதிருப்பது

அ) மகிழ்ச்சி ஆ) அழுக்காறு இ) நல்லொழுக்கம் ஈ) இன்பம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. சோழமன்னன் வெற்றிகொண்ட போரைப்பற்றிக் கூறும் இலக்கிய நூல்

அ) சிலப்பதிகாரம் ஆ) மகாபாரதம் இ) கலிங்கத்துப்பரணி ஈ) குண்டலகேசி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. தமிழினத்துக்கே சொந்தமான சான்றாண்மை கொண்ட பேராண்மை எனப்படுவது

அ) நாவறம் ஆ) போரறம் இ) பேரறம் ஈ) தாயறம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. முந்நீர் என்று அழைக்கப்படுபவை

அ) வெள்ளநீர், ஆறு, குளத்துநீர் ஆ) ஆற்றுநீர், மழைநீர், ஊற்றுநீர்

இ) கடல், மழை, வெள்ளநீர் ஈ) மழைநீர், ஏரி, குளத்துநீர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. பெயர்ச்சொற்களின் வகை

அ) எழுவகை ஆ) அறுவகை இ) பலவகை ஈ) நால்வகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. ஆற்றுநீர் சலசல என ஓடியது இதில் வந்த சலசல என்பது

அ) அடுக்குத்தொடர் ஆ) அடுக்கிடுத்தொடர் இ) இரட்டைக்கிளவி ஈ) இணைமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. வீரம் விளைவதற்குக் கரணியமானவை

அ) அஞ்சாமையும் மதிநுட்பமும் ஆ) வேகமும் விவேகமும்

இ) ஆண்மையும் அறிவும் ஈ) சீற்றமும் மாற்றமும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. போல, புரைய, அன்ன, ஒப்ப இவை

அ) உவமை உருபுகள் ஆ) வேற்றுமை உருபுகள்
இ) உவமேய உருபுகள் ஈ) பண்பு உருபுகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. வேற்றுமை உருபுகள் எத்தனை?

அ) எட்டு ஆ) ஏழு இ) ஆறு ஈ) பத்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. முகமதி என்பது

அ) வேற்றுமை அணி ஆ) தற்குறிப்பேற்ற அணி

இ) உருவக அணி ஈ) உவமை அணி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. இராசராச சோழனினின் தமிழ்ப் பெயர் யாது?

அ) பெருஞ்சேரலாதன் ஆ) நெடுஞ்செழியன்
இ) பாண்டியமன்னன் ஈ) அருள்மொழித் தேவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. வந்தனனன் என்பதன் சரியான பகுப்பு

அ) வா + ந் + த் + அன் + அன் ஆ) வா + த்(ந்) + த் +அன் +அன்
இ) வா + ட் + அன் + நன் ஈ) வா + த் + அன் + அன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. தந்தை மகனை நோக்கி நீ நாளை எங்கே போகிறாய் என்று கேட்டான். இது

அ) தொடர்ச் சொல்லியம் ஆ) கலப்புச் சொல்லியம்
இ) கூட்டுச்சொல்லியம் ஈ) கூட்டுக்கலப்புச் சொல்லியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. காற்சங்கிலி என்பது எவ்வகைப்புணர்ச்சி

அ) கெடுதற்புணர்ச்சி ஆ) தோன்றற்புணர்ச்சி
இ) இயல்புப்புணர்ச்சி ஈ) திரிதற்புணர்ச்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. முன்னாளில் ஆண்குழந்தைகளுக்கு அணியப்பட்டதாலி

அ) பொற்றாலி ஆ) முப்படைத்தாலி
இ) ஐம்படைத்தாலி ஈ) வெள்ளித்தாலி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

*(விடைகளைப் பிறிதொரு தாளில் எழுதுக.)*

## 2) தரப்பட்டுள்ள இலக்கண / மொழியியல் வினாக்களுக்கு விடை தருக.

1. 'முத்துப்பல்' என்னும் உவமையணியில் இடம்பெறும் உவமானம் உவமேயம் பொதுத்தன்மை என்பவற்றைத் தருக.

2. அல்வழித் தொகைகள் எத்தனை அவற்றுள் வினைத் தொகைக்கு எடுத்துக்காட்டுத் தருக.

3. பெயர்ச்சொற்கள் இலக்கிய அடிப்படையில் நான்கு வகையாகும் அவை எவை ? அவை ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுகள் தருக.

4. தோன்றல், திரிதல், கெடுதல், புணர்ச்சிகளுக்கு எடுத்துக் காட்டுகள் தருக.

5. ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு சொல்லியம் எழுதுக.

.

1. வாழையடிவாழை: 3. வனகவர்வு

2. பென்னம்பெரிய:

(புள்ளிகள் 15)

## 3) பாடநூல் வினா ஐந்திற்கும் முழுவிடை தருக.

1. *அழுக்காறு உடையான் முன் ஆக்கம் போன்றில்லை*
   *ஒழுக்கம் இலான்கண் உயர்வு* இக்குறளுக்கு விளக்கவுரை எழுதுக.
2. ஆரியர் எனப்படுவோர் யாவர்?
3. வடக்கிருத்தல் என்றாலென்ன? விளக்குக.
4. யாழ்ப்பாண அரசில் ஆரியம் விரவியமைக்குச் சான்றாக விளங்குவன யாவை?
5. பின்வரும் சொற்களுக்குப் பொருள் தருக.

   1. ஓதை
   2. செந்நீர்:
   3. மேதகு:
   4. அகல் விசும்பு:
   5. கடிமலர்:
   6. வாரணம்:

(புள்ளிகள் 15)

## 4) கீழ்வரும் பாடலை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு முழுவிடை தருக.

நேற்று மதிப்புடன் வாழ்ந்தோம்! - இந்த
    நிலத்தின் திசைகள் அனைத்தையு மாண்டோம்.!
ஆற்றல் மிகுந்த தமிழை - அரி
    அணையில் இருத்தி அழகு சுவைத்தோம்!
சோற்றுப் பிறவிக ளானோம் - இன்று
    சொந்தப் பெருமை யிழந்து சுருண்டோம்!
கூற்ற மெதிர்த்து வந்தாலும் - இனிக்
    கூனமாட்டோ மென்று கூவடா சங்கம்

1. நேற்று மதிப்புடன் வாழ்ந்தோம் என்ற கூற்றிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது என்ன?
2. எதனால் சொந்தப் பெருமையை இழந்ததாகக் கவிஞர் கூறுகிறார்?
3. இக் கவிஞர் தமிழ் மீது கொண்ட பற்றினைப் புலப்படுத்தம் கவி வரிகள் எவை?
4. இப் பாடல் எத்தகைய உணர்வுகளை உமது மனதில் ஏற்படுத்துகிறது?
5. பின்வரும் சொற்களுக்கு விளக்கம் தருக.

    கூற்றம்

    மதிப்பு

    ஆற்றல்

    திக்குகள்

(புள்ளிகள் 10)

5) தரப்பட்டுள்ள பந்தியை உமது வாழிடமொழியில் மொழிமாற்றுச் செய்க.

பலநாட்டு மாணவர்கள் ஒரு சந்திப்பின் போது, ஒவ்வொருவரும் தத்தமது நாட்டினைப் பற்றிப் பெருமையுடன் கூறிக்கொண்டனர். என் நாடுதான் முதன்முதலில் உலகத் தொழிலாளரே ஒன்று படுங்கள் என்று முழங்கி, புதிய உலகை விழித்தெழச் செய்தது என்றான் ருசிய மாணவன். தனிமனித வளர்ச்சியே தேவை என்ற தத்துவத்தால் உயர்வடைந்த நாடு என் நாடு என்றான் அமெரிக்கன். காந்தீயம் என்னும் அருளாண்மை எமது சொத்துடைமை என்று கூறினாலும் சிறுபான்மை இனங்களை அடக்குவதில் வெற்றிகொண்ட ஆரிய நாடு என் நாடு என்று தோளை நிமிர்த்தினான் இந்தியன். பிறநாடுகளிடம் கையேந்தலாகாது என்று தன் மக்கள் வலுவை உலகறியச் செய்த நாடு எங்கள் சீனா என்றான் சீனன். நாட்டின் மக்களையே முள்வேலிக்குள் அடைக்கும் நாடு என் நாடு என்று கூறமுடியுமா என்றெண்ணித் தலைகுனிந்தான் ஒரு மாணவன்.

(புள்ளிகள் 05

6) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, இருநூற்றைம்பது சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை வரைக

1. செம்மொழி எங்கள் தமிழ்மொழி
2. இயற்கை மாறுபாடடைந்து வருவதன் விளைவுகள்
3. போரின் பின்பு தாயக நிலைமைகள்
4. நல்லொழுக்கம் பற்றிய வள்ளுவர் கூற்றைத் தொகுத்துக் கட்டுரை ஆக்குக. (உரைநடையில்)

(புள்ளிகள் 15

## 7) தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து, கீழுள்ள வினாக்களுக்கு முழுவிடை தருக.

நல்ல வெய்யில் தெரு வழியே நடந்து வந்தார் வள்ளுவர் ஆமாம் குறளாசிரியர்தான். வீட்டுவாசலில் அரிசி புடைத்துக் கொண்டிருந்த கிழவி முற்றத்தின் ஓரத்தில் குவிந்திருந்த தவிட்டைத் தெருவிலே வெய்யிலில் கொட்டிவிட்டு உள்ளே சென்றாள். தவிட்டிலிருந்து வெளியே மெல்ல நெளிந்து வந்தது ஒரு புழு. வெள்ளை வெளேரென்றிருந்தது அந்த அரிசிப்புழு.
தெருப்புழுதி அனலாய்க் காய்ந்து கொண்டிருந்தது. இதை அந்த அப்பாவிப் புழு கண்டதா என்ன? தெருவைத் தொட்டதும் வெய்யில் சுரீரென்று தைத்ததுந்தான். அடடா பேரிடர் வந்து விட்டது என்பது அதற்குத் தெரிந்தது. வெய்யில் அதன்பாட்டில் காய்ந்தது. காய்வது அதன் இயல்பு. புழுவைப் பற்றி அது கவலைப்படவில்லை. புழு ஒன்று இருக்கிறது என்பது கூட அதற்குத் தெரியாது. எப்போதும் போல, வான முகட்டிலிருந்து வெப்பத்தையும் ஒளியையும் வாரி இறைத்துக் கொண்டிருந்தது. புழுவோ துடித்தது. உடம்பைக் குறுக்கியது, நெளித்தது, வளைத்தது என்ன செய்தாலும் சுற்றிச் சூழ்ந்த அனற் காட்டிலிருந்து விடுதலை இல்லை. தப்பி ஓடவும் முடியவில்லை. தரையிலிருந்து தன்னைத் தானே நிமிர்த்தி, நிழலை நோக்கி விரைவதற்கு அதற்கு ஆற்றல் இல்லை. ஏன்? அதன் உடல் எலும்பில்லாத உடல். சிறிது ஊர்ந்து பார்த்தது அதற்குள் தெருப் புழுதியின் அனல்வாய் அதைக் கவ்வியது இருந்த இடத்திலேயே நகர முடியாமல் புழு துடித்தது. இதைக் கண்டார் வள்ளுவர். குனிந்து புழுவைப் பரிவோடு எடுத்து நிழலில் விட்டார், நின்றார். நீண்ட பெருமூச்சு விட்டார். எண்ணினார். எத்தனை எத்தனை விசித்திரமான உயிர் வகைகள் இந்த உலகில் வாழ்கின்றன! எலும்பில்லாத இந்தப் புழுவிலிருந்து நுட்பமான உடல் அமைப்பும், அறிவும் பெற்ற மாந்தன் வரையில் எத்தனை கோடி உயிர்கள் இந்த மண்ணிலே உள்ளன! ஒவ்வொரு உயிரும் ஒரு வரம்புக்குள்ளே வாழ்கிறது. அந்த வரம்புக்குள்ளும் நிலையாக வாழ்வதற்கு அதனிடம் இயல்பாக அமைந்து கிடக்கும் சக்திகளை அது பாதுகாத்து வளர்க்க வேண்டி இருக்கிறது. மீனுக்குத் தண்ணீர் வரம்பு. அதைக் கடந்தால், மீன் செத்து விடுகிறது. அதற்குள்ளே வளமாக வாழ்வதற்கு உரமான செதில்களும், வாலும், விரைவாக நீந்தும் வலிமையும் மீனுக்கு அகத்தியமானது. இப்படித்தான் ஒவ்வொரு உயிருக்கும். எலும்பில்லாத இந்த அரிசிப்புழுவுக்கு அரிசியும் தவிடுமே உலகம். அதைத் தாண்டி வெய்யிலில் தலை நீட்டினால், துடித்து மடிகிறது. மற்றைய உயிர்களைப் போலவே மாந்தனும் வரம்புடைய ஓர் உலகில் தான் வாழ்கிறான். ஆகவே, அந்த மட்டில் ஐம்பூத வரம்புகளுக்கு அவன் கட்டுப்பட வேண்டியிருக்கிறது. குமுகாயத்தில் ஒருவனாக அவன் வாழ்கிறான். அந்த அளவில் குமுகாய சட்டதிட்டங்கள், மரபு, கோட்பாடு, கலாசாரம், குறிக்கோள்கள் இவையாவும் அவன் குமூக வாழ்வுக்கு எல்லைகளாக உள்ளன.

1. வெய்யிலின் இயல்பு என்ன? வெயில் வானத்திலிருந்து எவற்றைக் கொட்டிக் கொண்டிருந்தது?

2. காய்ந்த தெருப்புழுதியில் அகப்பட்ட புழுவின் நிலைமையை விளக்குக?

3. வள்ளுவர் பெருமூச்சுவிடக் கரணியம் என்ன? விளக்குக?

4. மீன்கள் வளமாக தம்மைக் காத்து வாழ்வதற்கு அகத்தியமானவை எவை?

5. மாந்தனின் குமுகாய வாழ்வுக்கு அகத்தியமானவை எவை?

(புள்ளிகள் 10